**செய்தி வெளியீடு எண்:165** **நாள் :21.04.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் சுகாதாரத் துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்.**

**தமிழகத்தில் பச்சிளம் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் நலனுக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தகவல்.**

-----

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் இன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் இன்று **(21.04.2015)** நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்திற்கு முன்னிலை வகித்து திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து விளக்கம் அளித்தார். பின்னர், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதி உதவித் திட்டம், ‘104’ மற்றும் ‘108’ மருத்துவச் சேவைத் திட்டம், பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையம், ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு மையம், மருத்துவமனைகளுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஆகியவை குறித்து மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத் தரத்தை தமிழ்நாடு அடையவேண்டும் என்பதே **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் கொண்டுவந்துள்ள தொலைநோக்குத் திட்டம் **2023–ன்** குறிக்கோளாகும். இதனை எய்தவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை அறிக்கையில் சுகாதாரத் துறைக்கு கணிசமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **2010–11–**ஆம் ஆண்டில் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.**4,395.31** கோடி ஆகும். நடப்பு **2015–16–**ஆம் ஆண்டிற்கு இது ரூ.**8,245.41** கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இது ஏறக்குறைய **90** விழுக்காடு அதிகமாகும்.

ஆய்வின்போது **அம்மா** அவர்களால் கொண்டு வரப்பட்ட 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை 10.36 இலட்சம் நபர்களுக்கு ரூ.2,174 கோடி காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதில் அரசு மருத்துவமனைகள் மட்டும் ரூ.788 கோடி காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று இதன் மூலம் மருத்துவத் துறையில் கட்டட வசதிகள், மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு அரசு மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தாய் சேய் நலத்தினைப் பேணிக்காப்பதற்கும் **மாண்புமிகு அம்மா** அவர்களின் அரசு பல்வேறு மகத்தான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தாய் சேய் நலத் திட்டங்கள் பற்றியும் விரிவான ஆய்வும், ஆலோசனையும் நடத்தப்பட்டது. குறிப்பாக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் உயர்த்தி வழங்கப்படும் ரூபாய் 12,000/–உதவித் தொகை, 24 மணிநேரமும் செயல்படும் ஒருங்கிணைந்த அவசரப் பேறுகால சிகிச்சை மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மையம், (Comprehensive Emegengy Obstetric and Neonatal Care - CEmONC Centers) பச்சிளங் குழந்தைகளை நிலைப்படுத்துதல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளைத் தோற்றுவித்தல், (New Born Stabilisation Unit and Neonatal Intensive Care Unit) தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து அளிப்பது போன்ற பல்வேறு திட்டங்களினால் இந்த சிசு மரண விகிதம் தமிழகத்தில் தொடர்ந்து படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது என எடுத்துரைக்கப்பட்டது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்கு மற்றும் வழிகாட்டுதலின்படி சிசு மரண விகிதத்தை குறைப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக பச்சிளங் குழந்தைகளை தொடர் சிகிச்சைக்காகவும் உயர் சிகிச்சைக்காகவும் எடுத்துச் செல்வதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட 37 பச்சிளம் குழந்தைகளுக்கான சிறப்பு அவசர கால ஊர்திகள் (Neonatal Ambulance) இன்குபேட்டர் (Incubator), வால்யூம் இன்ப்யூஷன் பம்ப் (Volume Infusion Pump), வென்டிலேட்டர், (Ventilator), ஆக்சிஜன் சிலிண்டர் (Oxygen Cylinders), பல்ஸ் ஆக்சிமீட்டர் (Pulse Oxymeter), மல்டி பாராமீட்டர் (Multi Parameter) போன்ற அதி நவீன உபகரணங்களுடன் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு குறித்து 90 நாட்கள் பயிற்சியும், மேலும் 45 நாட்கள் அவசரகால பயிற்சியும் பெற்ற செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தில் மட்டும், கடந்த நான்காண்டுகளில் இதுவரை 23,769 பச்சிளம் குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் உயர் சிகிச்சைக்கு எடுத்து செல்லப்பட்டு உயிர்காக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் தாய் சேய் நலத் திட்டங்கள் காரணமாகத்தான், தாய் சேய் நலக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. சிசு மரண விகிதத்தை பொறுத்தவரை இந்திய அளவில் 1000 உயிருள்ள குழந்தை பிறப்புகளுக்கு 40–ஆக இருக்க தமிழ்நாடு 21 என்ற அளவை எட்டியுள்ளது. குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்ததற்காக கடந்து மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து ரூ.489.40

கோடி நிதியை ஊக்க நிதியாக பெற்றுள்ளது பாராட்டுக்குரியது. தாய்மார்கள் பிரசவத்தின் போது ஏற்படும் இறப்பு நிகழ்வுகள், இந்திய அளவில் ஒரு இலட்சம் உயிருள்ள குழந்தை பிறப்பிற்கு 167 என்ற அளவில் இருக்க, தமிழ்நாட்டில் தற்போதைய கணக்கீட்டின்படி 68 என்ற நிலையை எட்டியுள்ளது. மேலும் இறப்பு நிகழ்வுகளை தவிர்க்க சமுதாய ஈடுபாட்டுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும், பல சிறப்பான திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் குறிப்பாக ஏழை மக்களின் நலனில் மிகுந்த கவனம் செலுத்தி வரும் இந்த அரசு, ஏழை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மகப்பேறு நிதியுதவியை ரூபாய். 6,000/–லிருந்து ரூபாய்.12,000/–ஆக 01.06.2011 முதல் உயர்த்தியது. இத்திட்டத்தின் நோக்கம், ஏழை கருவுற்ற தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்டவும், **கர்ப்ப காலத்தில் சத்தான உணவு உண்டு நிறைவான எடையுள்ள குழந்தையை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை மற்றும் பேறு காலத்திற்குபின் ஏற்படும் நோய்களை தடுக்கவும், குழந்தை பிறந்தது முதல் தாய்ப்பால் மட்டுமே கொடுத்து குழந்தையை அனைத்து நோய்களிலிருந்து தடுத்து ஆரோக்கியத்தை பெறவும்** மகப்பேறு நிதியுதவியாக ரூபாய்.12,000/– வழங்கப்படுகிறது. இந்நிதியுதவி, தாய்மார்களின் வங்கிக் கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிதி உதவி மூன்று தவணைகளாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு ஆண்டுகளில் 26.72 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் ரூ.2,477.95 கோடி நிதி உதவி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (Tamilnadu Medical Services Corporation Ltd.) மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கும் தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்முதல் செய்து விநியோகித்து சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் பணிகள் பல்வேறு மாநில அரசுகளில் பாராட்டை பெற்றதோடு மட்டுமல்லாமல் தத்தம் மாநிலங்களில் இது போன்ற நிறுவனங்களை தொடங்கி வைத்து தமிழகத்தை பின்பற்றி வருகின்றன.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மருத்துவப் பணியாளர்களை தேர்வு செய்யும் பொருட்டு இந்தியாவிலேயே முதன்முறையாக மருத்துவப் பணியாளர்கள் வாரியம் (Medical Recruitment Board) என்ற அமைப்பை நிறுவியது குறிப்பிடத்தக்கது. இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை 7,577–க்கும் மேற்பட்ட புதிய பணியிடங்களை உருவாக்கி நியமனம் செய்து மகத்தான பணியை மேற்கொண்டது நாடறிந்த உண்மை. மேலும் சிறப்பு மருத்துவர்களை (Speciality Doctors) உடனுக்குடன் நிரப்பும் முகமாக Walk-in-Selection என்ற ஒரு புரட்சிகரமான அரசாணையை வெளியிட்டு சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். பச்சிளம் குழந்தைகளை தாயுள்ளத்தோடு பராமரித்து பாதுகாக்கும் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தாயின் பரிவோடு சேவையை தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த, ரூ.734.42 கோடி நிதியும், மருத்துவக் கருவிகளுக்காக ரூ.360.51 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் இரண்டாம் நிலை மருத்துவமனைகளை வலுப்படுத்த ரூ.113.57 கோடி நிதியும், உபகரணங்களுக்காக ரூ.74.40 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதியிலேயே சுகாதார வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக, கடந்த நான்கு ஆண்டுகளில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.134.40 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டதோடு, 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.131.16 கோடி செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக நவீன மருத்துவக் கருவிகளுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி, 42 ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாய் சேய் நல மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

108 அவசர ஊர்தி திட்டத்தில் தற்போது 703 வாகனங்கள் இயக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் 2011–12 முதல் 7.05 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள், 68,150 பச்சிளம் குழந்தைகள் உட்பட 26.87 இலட்சம் நபர்கள் பயன்பெற்றுள்ளனர். 104 மருத்துவ தகவல் சேவை மூலம் பொதுமக்களிடமிருந்து 9,62,027 அழைப்புகள் பெறப்பட்டு, அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வின்போது துறைத் தலைவர்கள் மற்றும் துறை அதிகாரிகள் மற்றும் கள அளவில் பணியாற்றும் செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் அரசின் பல்வேறு மகத்தான முன்னோடித் திட்டங்களால் மக்கள் பயனடையும் வகையில் முனைப்புடன் செயல்படுத்த அறிவுரை வழங்கினார். மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்பு செயலாளர் டாக்டர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) செல்வி அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திரு எஸ். நடராஜன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் குழந்தைசாமி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**